பொதுப்பணிகள்– நிலஅளவைப் பதிவேடுகள் துறை– திருப்பூர் மாவட்டம்– திருமதி திருமதி.ப.சிவாநந்தபிரியா என்பவர் (க/பெ காலஞ்சென்ற திரு.கு.சிவசெல்வகுமார்)– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**
**பணிகள் அலகு, பணி9(2) பிரிவு**

அரசாணை (3டி) எண்:30 நாள்: 01.04.2022
திருவள்ளுவராண்டு 2053,
பிலவ வருடம், பங்குனி–18

படிக்கப்பட்டது:

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண். ந.க.ர1/3148/ 2022(நி.அ), நாள் 16.02.2022.

ஆணை:

திருப்பூர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் அலகில் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நில அளவராகப் பணியாற்றிய போது 15.08.2019 அன்று காலமான திரு.கு.சிவசெல்வகுமார் என்பவரின் மனைவி திருமதி.ப.சிவாநந்தபிரியா என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். நில அளவைப் பதிவேடுகள் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் திருப்பூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 22.02.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திருமதி.ப.சிவாநந்தபிரியா என்பவரை திருப்பூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் அலகில், கருணை அடிப்படையில் 22.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய ஆணை வேண்டி திருப்பூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. திருப்பூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநரின் முன்மொழிவினை நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ஏற்று, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தபின்னர், திருப்பூர் மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ப.சிவாநந்தபிரியா என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 22.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை

செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 4983/க்யூ2/2022-1, நாள் 18.03.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.2152935/ஜி2/2022-1, நாள் 23.03.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை – 5.
உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருப்பூர் மாவட்டம்.
திருமதி.ப.சிவாநந்தபிரியா, இளநிலை உதவியாளர்
(திருப்பூர் மாவட்ட நில அளவைப் பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மூலமாக)

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச்செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

ந.க. அ1/5155/2020; நாள்: 11.04.2022

நகல் வழங்கப்படுகிறது.

பெறுநர்
திருமதி. ப. சிவாநந்தபிரியா,
இளநிலை உதவியாளர்
மாவட்ட நில அளவை அலுவலகம்
திருப்பூர்

உதவி இயக்குநா
மாவட்ட நில அளவை அலுவலகம்
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
திருப்பூர் – 641 604